1995 ஏப்ரல் 27]

462—

அரசு மருத்துவமனைகளில் இருப்பிட வசதி ஏற்படுத்துதல்

**36775—டாக்டர் சு. மணிமேகலை :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பெரிய அரசு மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளைப் பார்க்க வருபவர்கள் தங்குவதற்காக மருத்துவமனைக்கு அருகாமையில் இருப்பிட வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். 1995-96 ஆம் ஆண்டிற்குரிய பகுதி 2 திட்டத்தில் 22½ லட்ச ரூபாய் செலவில் 15 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் `வெயிட்டிங் ரூம்ஸ்' கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அரசு ஒப்புதல் அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆண்டுகளில் நான் கேட்ட கோரிக்கைகளுக்கு இன்றுதான் அமைச்சர் அவர்கள் ஆம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ரிமோட் பிளேசிலிருந்து பேஷண்ட்டாக கவர்மென்ட் ஹாஸ்பிட்டலில் அட்மிட் செய்யும்போது— பார் ஏ புரலாங்குடு டிரிட்மெண்ட்க்கு, ஹெளிஸியா, கோமா கேஸஸ், சர்ஜிகல் கேஸஸ், அங்கே, ஹாஸ்பிட்டலிலே லாங் டைம் இருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதே சமயத்தில் அவர்களை அட்டெண்டு செய்ய வேண்டிய அவசியமும் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே அட்டெண்டர்ஸ் அவர்கள் கூடவே இருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருப்பதால் அவர்களுக்கென்று பிரத்யேகமாக தனி அறையை அமைத்து, இதற்கு ஏதாவது ஒரு தொகையை வசூல் பண்ணி, இந்த அட்டெண்டர்ஸ்க்கு என்று உள்ள இந்தத் திட்டத்தினை எப்பொழுது அமைச்சர் அவர்கள் செயல்படுத்துவார்கள் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நான்கு ஆண்டு காலத்திலே ஆம் என்று சொல்கிற அளவிலே அவர்கள் கேள்வி கேட்டதற்காக (சிரிப்பு) அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது பணம்

ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டிடங்களைக் கட்டிய உடனே பயனுக்கு கொண்டு வரலாம். இதிலே சில கட்டுப்பாடுகளை நாம் விதிக்க இருக்கிறோம். இதிலே தொடர்ச்சியாக பல பேர் வந்து தங்கிவிடக்கூடாது. அங்கு இருக்கிற நோயாளிகளுடன் வரக்கூடிய, அட்டெண்டு பண்ணுகிறவர்கள் மட்டும்தான் இருக்க வேண்டும். காரணம் அரசாங்கத்தினுடைய இடம் என்று சொன்னால் எல்லோரும் அதிலே சொந்தம் கொண்டாட ஆரம்பித்து விடுவார்கள். அதைக் கட்டுப்படுத்துகிறபோது வேண்டாத பிரச்சினைகள் எல்லாம் வரும். எனவே, இதை மிகக் கட்டுப்பாடாக நடத்த வேண்டுமென்று நான் கருதுகிறேன். எனவே, தொடர்ச்சியாக தங்க நிச்சயமாக அனுமதி கிடையாது. அந்த வகையிலேதான் இதை அமைக்க இருக்கிறோம். கட்டியவுடனே அந்தப் பயன் மக்களுக்குக் கிடைக்கும்.

முற்பகல் 10-10

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு கட்டும்பொழுது, அந்த அறைகளை கிரானிக் பேஷண்ட்ஸ்-ஸுக்கு என்று வகைப்படுத்தி அதைத் தனியாரிடம் டெண்டர்-ஆக விட்டு, அவர்களே அதை மெயின்டெயின் செய்ய அரசு ஆவன செய்யுமா? ஏனென்றால், நாம் தனியாக ஆஸ்பிடல் மெயின்டெனன்ஸோடு ஒன்றாக விட்டோமேயானால் அது அவ்வளவு சரிவராது. ஆகவே, அதைத் தனியாரிடம் டெண்டர் மூலம் விட்டோம் என்றால் அவர்கள் அதை முறையாகச் செயல்படுத்துவார்கள். இதுமாதிரி, கிரானிக் பேஷன்ட்ஸ்-களுக்கு மட்டும் தேவைப்படும் அட்டெண்டரும் கட்டாயமாக உள்நோயாளிகளுடன் இருக்க வேண்டும் என்ற தகுதியுள்ள பேஷன்ட்ஸ்களுக்கு மட்டும் அந்த அறையை ஒதுக்கி, அதற்காக அந்த டெண்டர் விடுபவர்களிடம் ஒரு நிபந்தனையைப் பெற்று, அதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி அரசு பரிசீலிக்கும். ஏற்கெனவே, காஞ்சீபுரம் காரப்பேட்டை மருத்துவமனையிலே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரிலே அமைந்திருக்கிற மருத்துவமனையிலே இது போன்ற கட்டிடம் கட்டி முடித்து, குறைந்த வாடகையிலே அங்கே வருகின்ற நோயாளிகளுடைய அட்டெண்டருக்கு நாம் கொடுத்திருக்கிறோம். அதைப் போலதான் இதையும் செய்ய வேண்டும் என்று நாம் கருதுகிறோம். ஆனால், எல்லா மாவட்டங்களிலும், இது அமைக்கப்படுகிறபொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், ஏதாவது ஒரு

நடவடிக்கை எடுத்தால்தான் அதை சிறப்பாகப் பராமரிக்க முடியும். இன்னும், நாம் கட்டுகிற இந்தக் கட்டிடம் பெண்களுக்குத் தனியாக, ஆண்களுக்குத் தனியாக, தங்குவதற்கான வசதிகள், கழிப்பறைகள், இப்படி அனைத்து வசதிகளையும் அதிலே செய்ய வேண்டுமென்று நாம் இருக்கிறோம். இதுவரை அதைப்போல வசதிகள் இல்லை. புரட்சித் தலைவியினுடைய அரசுதான் அந்த நடவடிக்கையை எடுத்து இப்போது முதன் முறையாக அப்படிப்பட்ட முயற்சி எடுத்திருக்கிறது. எனவே, பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இதிலே சிறப்பாக இருக்கிறவரை அரசாங்கமே நடத்தலாம். அப்போது மக்களுக்குப் பிரச்சினை இருக்காது. பொதுமக்களுடைய ஒத்துழைப்பு சரியாக இல்லையென்ற நிலை ஏற்படுமேயானால், அதை தனியாரிடத்திலே கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாவட்ட அளவிலே இருக்கின்ற அரசு மருத்துவமனைகளில் மட்டும் இப்படிப்பட்ட தங்குகின்ற கட்டிடம் கட்டுகின்ற வசதி ஏற்படுமா? அல்லது கோட்ட அளவில், தாலூகா அளவில் இருக்கின்ற அரசு மருத்துவமனைகளிலும் இப்படி கட்டப்படுமா? எங்களுடைய பகுதியைச் சேர்ந்த கோபிசெட்டிபாளையத்தில் மாவட்ட அளவிலே பெரிய அரசு மருத்துவமனை இருக்கிறது. அதிலே முன்னுரிமை கொடுத்து கட்டப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்கட்டமாக மாவட்டத் தலைமை மருத்துவமனையிலே இதைக் கட்டுவதற்காக அரசு நடவடிக்கை எடுக்கும். அதற்குப் பின்னாலே, தாலூகா மருத்துவமனையில், எவையெல்லாம் பெரிய மருத்துவமனைகளாக இருக்கிறதோ, அங்கு கட்டுவதற்கான நடவடிக்கையை தொடர்ந்து எடுக்கலாம். கால அளவு எப்போது என்பதை இப்போது என்னால் குறிப்பிட்டுச் சொல்லமுடியாது. ஆகையால், எங்கே அவசியம் இருக்கிறதோ, அங்கே செய்யலாம். தாலூகா மருத்துவமனையைப் பொறுத்தவரை, பெரும்பகுதி வந்து போய்விடுகிற வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது. இருந்தாலும் பெரிய மருத்துவமனைகளாக 100 படுக்கைகளுக்கு மேல் இருக்கின்ற மருத்துவமனைகளிலே அவசியம் இருக்கும். ஆனால், இப்போதுள்ள நிதி நிலைமையிலே அங்கும் அதைச் செய்ய முடியாது. இவற்றையெல்லாம் முடித்துவிட்டு அடுத்த கட்டமாக அதை எடுக்கலாம்.